# தமிழக மக்கள் எல்லா வகையிலும் முன்னேற வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

காரணம் என்னவென்றால், ஆட்சிப் பொறுப் பேற்ற சில நாட்களில், சென்னை, அசோக் நகர் மகளிர் பள்ளிக்குச் சென்றபோது, அங்கிருந்த மாணவிகளிடம், “காலையில் என்ன சாப்பிட்டீர்கள்?” என்று சாதாரணமாக கேட் டேன். ஆனால், நிறைய குழந்தைகள் சாப்பி டவில்லை என்று சொன்னார்கள்.

சில மாணவிகள், “டீ மட்டும் குடித்துவிட்டு வந்துவிட்டேன்” “பன் சாப்பிட்டேன்” - இது போல சொன்னார்கள். இதை மனதில் வைத் துத்தான் காலை உணவுத் திட்டம் தேவை என்பதை அரசின் கொள்கையாகவே அறி வித்தேன்.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில், மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தொடங்கி வைத் தேன்.

முதல்கட்டமாக, ஆயிரத்து 545 பள்ளிக ளில், ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பயனடைந் தார்கள்.

பிறகு, 25.08.2023 அன்று, முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த திருக்குவளையில், அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் இதை விரிவாக்கம் செய்தோம்.

### நகர்ப்புற பகுதிகளிலும் விரிவாக்கம்!

2024ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாளில், ஊரகப் பகுதிகளில் இருக் கக்கூடிய அரசு உதவி பெறும் தொடக்கப் பள் ளிகளுக்கும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதுவரை, 17 இலட்சம் மாணவ, மாணவியர் பயன்பெற்று வந்தார்கள். இந்தத் திட்டத்தின் அட்டகாசமான சக்சஸ் மற்றும் இது கொடுக் கக்கூடிய அபாரமான ரிசல்ட்டைப் பார்த்து, இனி, நகர்ப்புற பகுதிகளில் செயல்படுகின்ற 2 ஆயிரத்து 429 அரசு உதவிபெறும் பள்ளிக ளுக்கும் விரிவாக்கம் செய்கிறோம். இதனால், கூடுதலாக 3 இலட்சத்து 6 ஆயிரம் குழந்தை கள் பயன்பெற இருக்கிறார்கள். கிராண்ட் டோட்டலாக சொல்லவேண்டும் என்றால், இனி தமிழ்நாட்டில் செயல்படுகின்ற 37 ஆயி ரத்து 416 அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் படிக்கின்ற 20 இலட் சத்து 59 ஆயிரம் மாணவர்கள் தினந்தோறும் காலையில் சூடாக, சுவையாக, சத்தான சாப் பிட்டு, கிளாஸ் ரூமுக்குள்ளே தெம்பாக நுழைய இருக்கிறார்கள்.

ஆண்டொன்றுக்கு 600 கோடி ரூபாய் மதிப்பில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகி றது. ஆனால், இதை செலவு என்று நான் சொல்ல மாட்டேன். இது ஒரு சூப்பரான சோஷியல் இன்வெஸ்ட்மெண்ட். எதிர்காலத் தில், நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு, பல மடங்கு லாபத்தை தமிழ்ச் சமூகத்துக்கு தரப் போகின்ற முதலீடு இது! என்னரும் தமிழ் நாட்டு மாணவச் செல்வங்களை நம்பி, அவர் களின் திறமை மேல், அறிவு மேல், ஆற்றல் மேல் நம்பிக்கை வைத்து, தமிழ்நாடு அரசு இந்த முதலீட்டை செய்கிறோம். நீங்கள் எல் லோரும் நன்றாக படித்து, முன்னேறி தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் பணி யாற்றினால், அதுதான் இந்தத் திட்டத்தின் உண்மையான வெற்றி!

இன்னும் கொஞ்சம் இறுமாப்போடு சொல்ல வேண்டும் என்றால், இனிமேல், பள் ளிக்கு வருகின்ற குழந்தைகள், பசி காரண மாக வாடிய முகத்துடனும், சோர்வுடனும் இருக்க மாட்டார்கள். புன்னகையும், நம்பிக் கையும், ஆர்வமும், சுறுசுறுப்பும் நிரம்பிய முகங்களைத்தான் இனி பார்க்கப் போகி றோம்.

### எதிர்பாராத பல நன்மைகள்!

காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்ட தில் இருந்து, நான் இதை க்ளோசா... மானிட் டர் செய்து கொண்டு வருகிறேன். மாநில திட் டக்குழு மூலம் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. பசி இல்லாத நிலை, பிள்ளைகள் வயிறு நிறைகிறது என்று மட்டும் இந்தத் திட் டத்தை சிம்ப்பிளாக பார்க்க முடியாது. இத னால்,

- உணவுண்ணும் பழக்க வழக்கங்களில் இம்ப்ரூவ்மெண்ட் வந்திருக்கிறது.
- பாசிட்டிவான பழக்க வழக்கங்களை வளர்ப்பதில் பிள்ளைகள் ஆர்வம் காட்டுகி றார்கள்.
- மற்ற குழந்தைகளுடன் ஈசியா, ஜாலியா பழகுகிறார்கள்.
- குழந்தைங்களின் ஹெல்த் டெவலப் ஆகி யிருக்கிறது.
- ஸ்கூலுக்கு ஆர்வத்துடன் வருகிறார்கள்.
- க்ளாஸ் ரூமில் கவனம் மற்றும் ஈடுபாடு அதிகமாகி இருக்கிறது.
- வகுப்பில் தோழமை உணர்வு மேம்பட் டிருக்கிறது என்று ஆய்வு முடிவுகளில் தெரிய வந்திருக்கிறது.

எதிர்பாராத பல நன்மைகளையும் இந்தத் திட்டம் ஏற்படுத்தி இருக்கிறது. காலை உணவை பள்ளிகளே வழங்குவதால், ஒரு குடும்பத்தில் அம்மா - அப்பா இரண்டு பேருமே வேலைக்கு செல்கிறார்கள் என்றால், அவர்களுடைய பணிச்சுமை குறைந்திருப்பது டன், குழந்தைகள் ஸ்கூலில் வயிறார சாப்பிட் டிருப்பார்கள் என்ற நம்பிக்கையையும், நிம் மதியையும் தருகிறது!

### பிற நாடுகளிலும் திட்டம் அறிமுகம்!

அவ்வளவு ஏன்... டிசம்பர் 2023 முதல் டிசம்பர் 2024 வரை, அரசுப் பள்ளிகளில், குழந்தைகளிடையே ஆரோக்கியம் அதிகரித் திருக்கிறது. ஹாஸ்பிடலுக்குச் செல்வதும் குறைந்திருக்கிறது. இன்னும் சொல்கிறேன். காலை உணவுத் திட்டத்தால், அட்டெண் டன்ஸ் கூடியிருக்கிறது. கற்றல் திறனில் முன் னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஊட்டச்சத்துகுறை பாடு குறைந்திருக்கிறது. நோய்த்தொற்று வாய்ப்புகள் அதுவும் குறைந்திரு க்கிறது. இப் படி, நிறைய பாசிட்டிவாக இருப்பது ஆய்வு மூலமாக நமக்கு தெரிய வந்திருக்கிறது.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.8.2025) சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில், உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கிவைத்து விழாப்பேருரையாற்றினார்.

ஒரு திட்டம் மிக மிகச் சிறப்பானது என் றால், மற்ற மாநிலங்களும் அதை பின்பற்று வார்கள். அப்படித்தான், காலை உணவுத் திட்டத்தை பிற மாநிலங்களும், பிற நாடுக ளுமே கூட தொடங்கவும், செயல்படுத்தவும் ஆலோசனை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கனடா போன்ற வளர்ந்த மேலை நாடுகளி லும், காலை உணவுத் திட்டத்தை அறிமுகப் படுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு எல் லாம் முன்னோடியாக நாம் இதை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பது நமக்கெல்லாம் இருக்கின்ற பெருமை! இந்த நேரத்தில் நம்முடைய அரசு செய்து கொண் டிருக்கின்ற மற்றொரு முக்கியமான திட்டத் தையும் சொல்ல விரும்புகிறேன்...

### “ஊட்டச் சத்தை உறுதி செய் திட்டம்!

அது, “ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்! இந்த திட்டத்தால் என்ன பயன் என்றால், இந் தத் திட்டத்தின் முதல் கட்டத்தின் முதல் பகுதி யில், ஆறு மாதம் வரையிலான 14 ஆயிரத்து 901 குழந்தைகளில், 13 ஆயிரத்து 262 குழந் தைகளையும், இரண்டாம் பகுதியில், ஆறு மாதத்தில் இருந்து ஆறு வயது வரையிலான 92 ஆயிரத்து 15 குழந்தைகளில், 61 ஆயி ரத்து 651 குழந்தைகளையும் ஊட்டச்சத்து குறைபாட்டில் இருந்து மீட்டெடுத்திருக்கிறோம்.

அதேபோல, இரண்டாம் கட்டத்தில், ஆறு மாதம் வரையிலான 76 ஆயிரத்து 705 குழந்தைகளில், 67 ஆயிரத்து 913 குழந்தை களை சத்துள்ள குழந்தைகளாக வளர்த்தெ டுத்திருக்கிறோம்.

### அரசின் முத்திரை திட்டங்கள்!

இந்தத் திட்டங்கள் மட்டும் கிடையாது, நம் முடைய அரசின் முத்திரை திட்டங்களில் முக் கியமான சிலவற்றை சொல்லவேண்டும் என்றால்,

குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற கலைஞர் மக ளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெறுகின்றவர் களின் எண்ணிக்கை 1 கோடியே 14 இலட்சம் பேர்!

### பேருந்துகளில் மகளிருக்கு கட்டண மில்லா விடியல் பயணம்!

அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேருகின்ற மாணவர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற, புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன்!

### வேலைக்குச் செல்கின்ற மகளிருக்கு தோழி விடுதிகள்!

மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனா ளிகளின் வீட்டுக்கே சென்று, நேரில் ரேஷன் தருகின்ற தாயுமானவர் திட்டம்!

> “அவ்வளவு ஏன்... டிசம்பர் 2023 முதல் டிசம்பர் 2024 வரை, அரசுப் பள்ளிகளில், குழந்தைகளிடையே ஆரோக்கியம் அதிகரித்திருக்கிறது. ஹாஸ்பிடலுக்குச் செல்வதும் குறைந்திருக்கிறது. இன்னும் சொல்கிறேன். காலை உணவுத் திட்டத்தால், அட்டெண்டன்ஸ் கூடியிருக்கிறது. கற்றல் திறனில் முன்னேற்றம் ஏற்பட்டிருக் கிறது. ஊட்டச்சத்துகுறைபாடு குறைந்திருக்கிறது. நோய்த்தொற்று வாய்ப்புகள் அதுவும் குறைந்திருக்கிறது. இப்படி, நிறைய பாசிட்டிவாக இருப்பது ஆய்வு மூலமாக நமக்கு தெரிய வந்திருக்கிறது.”

ஏழை, எளிய நடுத்தர மக்கள் இருக்கின்ற இடத்திற்கே சென்று பயனளிக்கின்ற உங்களு டன் ஸ்டாலின்! நலம் காக்கும் ஸ்டாலின்!

இது எல்லாவற்றுக்கும் ஹைலைட்டாக, நாட்டிலேயே Economyல் டபுள் டிஜிட் வளர்ச்சி அடைந்திருக்கின்ற மாநிலம் என்றால், அது நம்முடைய தமிழ்நாடுதான்!

### தமிழக மக்கள் எல்லா வகையில் முன்னேற வேண்டும்!

நான் C.M. ஆன நாளில் இருந்து எனக்கு இருந்த, இருக்கின்ற ஒரே குறிக்கோள், “தமிழ் நாடு அனைத்துத் துறைகளிலும் நம்பர் ஒன் மாநிலமாக வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் எல்லா வகையிலும் முன்னேறவேண்டும்!” இந்த நேரத்தில் நான் பெரிதாக நன்றி சொல் லிக் கொள்ள விரும்புவது... இந்த குழந்தை களுக்கு சமைக்கின்ற தாய்மார்களுக்குதான்! உங்கள் வீட்டில், உங்கள் குழந்தைகளுக்கு சமைக்கின்றது போல, நன்றாக சமைக்கிறீர் கள்! மகளிர் சுயஉதவிக் குழு சகோதரிக ளுக்கு நான் மனமார்ந்த நன்றியை சொல்கி றேன். உங்கள் பணியும் சிறப்பாக தொடர வேண்டும்!

மாணவர்களுக்கு நான் சொல்வது ஒன்று தான்... நன்றாக சாப்பிடுங்கள்... நன்றாக படியுங்கள்... நன்றாக விளையாடுங்கள்... உங்கள் வாழ்க்கை நன்றாக இருக்கும்!

முதலமைச்சரான உங்கள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினும், நம்முடைய திரா விட மாடல் அரசும், எங்களால் முடிந்த எல்லா வற்றையும் உங்களுக்காக செய்து தரு வோம்! எங்களுக்கு நீங்கள்தான் எல்லாமே! எப்போதும் உங்களுக்காகத்தான் நாங்கள் இருக்கிறோம்! இருப்போம்! இருப்போம்! குழந்தைகளுக்கு ஆல் த பெஸ்ட்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர் கள் உரையாற்றினார்.

---

ஆவடி, புனித அந்தோணியார் நடுநிலைப் பள்ளியில்

# “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்”

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பள்ளி மாணவர்களுடன் உணவு அருந்தினார்!

திருவள்ளூர், ஆக.27

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பக வந்த் மான் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகி யோர் முன்னிலையில் சென்னை, மயிலாப்பூர், புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிக ளுக்கு ”முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் ஆவடி, புனித அந்தோணியார் நடுநி லைப் பள்ளியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமி ழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாவட்ட ஆட்சித் தலை வர் மு.பிரதாப், தலைமையில் இத் திட்டத்தை துவக்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில், முத லமைச்சர் காலை உணவு வழங் கும் திட்டம் அரசு நிதி பெறும் பள்ளிக ளில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. “பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ சேய்த்தோ? கூறுமின் எமக்கே” (புறநானூறு 173) தமிழ் நாட்டில் உள்ள அரசுப்பள்ளிகளில் படிக்கும் ஏழைக் குழந்தைகளின் படிப் பினை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத் துக் குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்க வும், முதலமைச்சர் அவர்கள். குழந் தைகளுக்கு காலை உணவு வழங் குதல் குறித்து வெளியிட்ட மேற்கண்ட அறிவிப்பை செயல்படுத் தும் அரசு பள்ளிக் விதமாக ”முதல மைச்சரின் காலை உணவுத் திட்டம்” விரிவான இத்திட்டத்தைச் செயல்ப டுத்துவதற்கான வழிகாட்டு நெறிமு றைகள் வகுக்கப்பட்டுள்ளன. இத்திட் டம் கீழ்கண்ட குறிக்கோ ள்களை அடையும் நோக்குடன் வடிவமைக் கப்பட்டுள்ளது.

மாணவ / மாணவியர்கள் பசி யின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல் மாணவ / மாணவியரின் ஊட்டச்சத்து உறுதி செய்தல். குறை பாட்டி னால் பாதிக்கப்படாமல் இருத் தலை மாணவ/மாணவியரின் உயர்த்துதல், குறிப்பாக இரத்த சோகை ஊட்டச்சத்து குறைபாட்டி னை நீக்குதல். பள்ளிகளில் மாணவ மாணவியர்களின் வருகையை அதி கரித்தல் மற்றும் கல்வியில் தக்க வைத்துக்கொள்ளுதல் வேலைக்குச் செல்லும் பணிச்சுமையை குறைத் தல். தாய்மார்களின் இத்திட்டம் முதன் முதலில் நகராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளில் அரசாணை (நிலை) எண்.43 சமூக நலன் மற் றும் மகளிர் உரிமைத் 1)துறை, (சந 4 திருவள்ளூர் :27.07.2022 மாவ ட்டத்தில் ஆவடி மாநகராட்சி பகுதிக் குட்பட்ட 16 பள்ளிகளில் சுமார் 2153 மாணவ மாணவியர்களுக்கு முதல மைச்சரின் காலை உணவுதிட்டம் 16.09.2022 அன்று முதல் செயல்ப டுத்தப்பட்டு வருகிறது. உள்ளாட்சி * இரண்டாம் கட்டமாக அரசாணை (நிலை) எண்.33 சமூக நலன் மற் றும் மகளிர் உரிமைத்(சந 41) துறை, நாள்: 07.06.2023ன்படி திரு வள் ளூர் மாவட்டத்தில் அனைத்து நக ராட்சி மற்றும் அமைப்புகளின் கீழ் செயல்படும் அரசு பள்ளிகளில் பயி லும் 1 முதல் 5ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ மாணவியர்க ளுக்கு முதலமைச்சரின் காலை உணவுதிட்டம் விரிவாக்கம் செய்யப் பட்டு 21.08.2023 முதல் 1095 பள் ளிகளில் சுமார் 51215 மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள் திருவள் ளூர் மாவட்டத்தில் உள்ள உள் ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்ப டும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு முதலமைச்ச ரின் காலை உணவு திட்டம் விரிவாக் கம் செய்யப்பட்டு 15.07.2024 முதல் 99 பள்ளிகளில் சுமார் 4112 மாணவர்கள் பயனடைந்து வருகி றார்கள். திருவள்ளூர் மாவட்ட நகர்புற பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர்களுக்கும் விரி வாக்கம் செய்யப்படும் என அறிவிக் கப்பட்டது. தமிழக முதலமைச்சர் அவர்களால் இன்று (26.08.2025) சென்னை மாவட்டம், மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் விரிவாக்கம் செய்து வைத்தார். அதனை தொடர்ந்து 26.08.2025 முதல் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகர்புற பகுதிக ளில் செயல்படும் அரசு நிதி பெறும் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரையில் பயிலும் மாணவர் களுக்கும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்பட்டுள்ளது. திருவள்ளூர் மாவட்டில் நகர்புற அமைப்புகளின் கீழ் 30 அரசு நிதி பெறும் பள்ளிகளில் சுமார் 3675 மாணவமாணவியர்கள் திட்டத்தில் பயனடைவார்கள். திருவள்ளூர் மாவட்டத்தில் காலை உணவு வழங் கப்படும் பள்ளிகள் விவரம் பள்ளிகள் எண்ணிக்கை பயனாளிகள் எண் ணிக்கை ஊரகப்பகுதியில் அரசு பள் ளிகள் 1016, 44021, பேரூராட்சி பகு திகளில் 27, 2606, நகராட்சிப்பகுதி களில் 49, 4118, மாநகராட்சி பகுதிக ளில் 19, 2623, உள்ளாட்சி பகுதி அரசு நிதி பெறும்பள்ளிகள் 99, 4112, நகர்புற பகுதி அரசு நிதி பெறும் பள்ளி கள் 30, 3675, மொத்தம் 1240 பள் ளிகளை சேர்ந்த , 61155 மாணவர் கள் பயனடைவர்.

இந்நிகழ்ச்சியில், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திர சேகர், ஆவடி மாநகராட்சி மேயர் கு. உதயகுமார், மாநகராட்சி ஆணை யர் ரா.சரண்யா, துணை மேயர் சூரி யகுமார், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் செல்வராணி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (சத்துணவு) பஞ்சாட்சரம், மாவட்ட கல்வி அலுவ லர் (தொடக்க கல்வி) சுரேஷ்குமார், முதன்மை கல்வி அலுவலரின் நேர் முக உதவியாளர் மீனாகுமாரி, மாந கராட்சி செயற்பொறியாளர் பி.வி. ரவிச்சந்திரன் மண்டல 4 தலைவர் ஜோதிலட்சுமி, மண்டலம் 2 அமுதா பேபி சேகர் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ் பகுதிகளின் செயலாளர் கள் நாராயண பிரசாந்த் பொன் விஜ யன் பேபி சேகர், டி.தேசிங்கு, மற் றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகர்ப்புற அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் தொடங்கி வைத்த காலை உணவு விரிவாக்க திட்டத்தின் தொடர்ச்சியாக. திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்முடிப்பூண்டி பேரூராட்சி வார்டு 1ல் அமைந்துள்ள அரசு தொடக்கப் பள்ளியில் காலை உணவு வழங்கப்பட்ட நிகழ்வில் மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சி.எச்.சேகர் பள்ளிக் குழந்தைகளுடன் அமர்ந்து உணவருந்தி மழலையரோடு கலந்து கொண்டார். இந்நிகழ்வில், 1–வது வார்டு செயலாளர் காளிதாஸ், பேரூர் தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வினோத், ரஞ்சித் மற்றும் கழக உடன்பிறப்புகளும் கலந்து கொண்டனர்.



அரசு உதவி பெறும் தனியார் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு திட்டத்தை விரிவாக்கம் செய்திடும் உன்னத திட்டத்தினை திருவள்ளூர் பெரியகுப்பம் டி.இ.எல்.சி. உயர்நிலைப் பள்ளியில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு காலை உணவினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், நகராட்சி ஆணையர் தாமோதரன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், நகர கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், நகர பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், பள்ளி தலைமை ஆசிரியர், இருபால் ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் பங்கேற்றனர்.